செய்தி வெளியீட்டு எண் : 416 நாள்: 02.11.2021

# மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் கோமுகி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் வட்டம் கோமுகி அணையிலிருந்து மாண்புமிகு பொதுப்பணித்துறை (கட்டிடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர், இஆப, சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.தா.உதயசூரியன், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் திரு.க.கார்த்திகேயன், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜே. மணிக்கண்ணன் ஆகியோர் முன்னிலையில் இன்று (02.11.2021) விவசாய பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைத்தார்.

தண்ணீர் திறந்து வைத்து மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் வட்டம் கோமுகி நதி அணையிலிருந்து 10,860 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் 02.11.2021 முதல் தண்ணீர் திறந்துவிட ஆணையிட்டார்கள். அதன்படி, இன்றைய தினம் கோமுகி அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து வைக்கப்படுகிறது.

இவ்வணை கோமுகி நதியின் குறுக்கே கல்வராயன் மலையின் அடிவாரத்தில் 1965ல் கட்டி முடிக்கப்பட்டது. கோமுகி நதியின் குறுக்கே 11 அணைக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அணைக்கட்டுகளிலிருந்து 40 ஏரிகள் நீர் ஆதாரம் பெற்று மொத்தம் பழைய பாசன பரப்பு 5860 ஏக்கர் நிலமும், புதிய பாசன பரப்பு 500 ஏக்கர் நிலமும் என மொத்தம் 10860 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று பயனடைகிறது. இந்த அணையின் மொத்தம் நீர் மட்டம் 46 அடியாகும். அணையின் மொத்த கொள்ளவு 560.96 மி.க. அடியாகும்.

இவ்வணையிலிருந்து பழைய பாசன ஆற்றில் வினாடிக்கு 60 கன அடி நீரும், புதிய பாசன ஆற்றில் வினாடிக்கு 50 கன அடி நீரும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. தற்போது தண்ணீர் திறப்பதன் மூலம் பழைய பாசன பரப்பில் 7 கிராமங்களும், புதிய பாசன பரப்பில் 11 அணைக்கட்டுகள் மூலம் 33 கிராமங்களும் என சுமார் 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் பயன்பெறுகிறது.

தண்ணீர் திறந்து விடுவதால் வெள்ள அபாயம் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான ஏரிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான ஏரிகள் உட்பட அனைத்தும் தூர்வாரப்பட்டுள்ளதால், அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரை விவசாயிகள் உரிய முறையில் பாதுகாத்து விவசாய பாசனத்திற்கு பயன்படுத்திட தேவையான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாய பெருமக்கள் இவ்வணையிலிருந்து பாசனத்திற்காக வெளியேற்றப்படும் தண்ணீரை முழுமையாக விவசாயத்திற்கு பயன்படுத்தி அதிக மகசூல் பெற்று பயனடைய வேண்டுமென மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் திருமதி.பெ.புவனேஷ்வரி, பொதுப்பணித்துறை (நீர் வளத்துறை) செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், உதவி செயற்பொறியாளர் திரு.கோவிந்தராசு, உதவி பொறியாளர் திரு.சுதர்சன், சின்னசேலம் ஒன்றியக்குழு பெருந்தலைவர் திரு.சத்திய மூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

<u>செய்தி வெளியீடு:</u>

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.